Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JANUARY 11, 2024

வியாழக்கிழமை ஜனவரி 11, 2024 | ஒளி: 10 கதிர் 169 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## சொர்க்கத்துக்கு செல்ல முயன்ற
# 30 பேர் மீட்பு

'சொர்க்கத்துக்குச் செல்வதற்காக பூமியில் உயிர் துறக்க வேண்டும்' என்ற மூட நம்பிக்கையை பரப்பி ஏழு பேரை தற்கொலைக்குத் தூண்டியதாக கூறப்படும் ருவன் பிரசன்ன குணரத்ன என்ற நபரின் "மிசாதிடு" கும்பலுடன் நேரடியாக தொடர்புக்கொண்ட 30 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# பதுளையில் பாரிய மண்சரிவு

ஆறுமுகம் புலியரசன்

பதுளை மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக, ஆங்காங்கே ஏற்படும் மண்சரிவுகளால் பிரதான வீதிகளின் ஊடான போக்குவரத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# புதன் வரை இடைநிறுத்தம்

சீரற்ற காலநிலை மற்றும் வெள்ள அபாயம் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் புதன்கிழமை (10) முதல் 2024 ஜனவரி 16ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் அறிவித்துள்ளார்.

தற்போதைய காலநிலை முன்னறிவிப்புகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை கவனமாக ஆராய்ந்த பிறகு பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது. அதேவேளை, சம்மாந்துறை வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீட கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



# மீண்டும் மூடப்பட்டது

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மகாவலி கங்கை பெருக்கெடுத்துப் பாய்வதால் மன்னம்பிட்டி-கல்லளை பகுதியில் வெள்ளம் பாய்கிறது. இதனால் கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதி, உடனடியாக போக்குவரத்திற்கு மீண்டும் மூடப்பட்டுள்ளதாக பொலொன்னறுவை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

மன்னம்பிட்டிப் பகுதியில் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியை குறுக்கறுத்து சுமார் ஒரு அடிக்கு மேல் வெள்ளநீர் வேகமாகப் பாய்வதால் புதன்கிழமை (10)பகலில் இருந்து மறு அறிவித்தல் வரும்வரை வீதி போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் களமிறங்குவார்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவார் என ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராக களமிறங்குவார் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் முகாமைத்துவ சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும்
# "மக்களை வதைக்கும்"

### எதிர்வு கூறிய ஸ்ரீதரன் கொழுக்கட்டையும் மோதகம் என விளக்கினார்



சிங்கள, பௌத்த மேலாதிக்க எண்ணம், இன விரோத செயற்பாடுகள் தீர்வுக்கு வராத வரையில் என்ன சட்டத் திருத்தங்களை கொண்டுவந்தாலும், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற நீதிமன்ற நியாயசபை மற்றும் நிறுவனங்களை அவமதித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கொழுக்கட்டையும் மோதகமும் ஒன்றுதான் வடிவங்கள் வேறாக இருந்தாலும் இரண்டுக்குள்ளும் உள்ளே இருப்பது ஒரே பொருட்களே.

தொடர்ச்சி P2

# பெண் கொலை; ஆண் கைது



சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெண் ஊழியரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதன்கிழமை (10) காலை கைது செய்யப்பட்டதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



# இளவரசி ஆன் பாதம் பதித்தார்

பிரித்தானியாவின் இளவரசி ஆன் இலங்கைக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, கட்டுநாயக்க விமான நிலையத்தை புதன்கிழமை (10) பிற்பகல் வந்தடைந்தார்.

இங்கிலாந்தின் லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானமான யுல்-504 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை பிற்பகல் 1.06க்கு வந்தடைந்தார்.

தொடர்ச்சி P2



# 'சீசன்' இரத்து தவறான முடிவு

பாடசாலை மாணவர்களுக்கு ஜனவரி மாதம் வழங்கப்பட்ட சீசன் சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், இரத்தாக்கப்பட்ட சீசன் டிக்கெட்டுகளை மீண்டும் செல்லுபடியாக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) விசேட கூற்றை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# 50வது நினைவேந்தல்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் புதன்கிழமை (10) யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்
# "மிகவும் ஆபத்தானது"

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மிகவும் ஆபத்தானது என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற நீதிமன்ற நியாயசபை மற்றும் நிறுவனங்களை அவமதித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். மக்கள் வீதிக்கு இறங்குவர். அதன்போது அவர்களுக்கு எதிராக தடைச் சட்டத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். அரசாங்கத்திற்கு எதனையாவது செய்யுமாறு கூறினாலோ, செய்ய வேண்டாமென்று கூறினாலோ பயங்கரவாதியென்று கூறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# காலநிலை சீர்கேட்டால் மரக்கறிகள் எகிறின

டி.ஷங்கீதன்

இலங்கை முழுவதும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற தொடர் மழையின் காரணமாக அனைத்து விவசாய உற்பத்திகளும் வரலாறு காணாத அளவிற்கு விலை அதிகரித்துள்ளது. இத்துடன் விவசாயிகளும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர்.

தங்களுடைய விவசாய உற்பத்திகள் விலை அதிகரித்திருந்த போதிலும் அதற்கான இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமையே ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக அதிக அளவிலான விவசாய மருந்துப் பொருட்களைப் பாவிக்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உற்பத்தி செலவினமானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது.



தொடர்ச்சி P2

# "விஷச் செடியை வேருடன் அழிப்போம்"

இராணுவத்தினரை வஞ்சிக்கும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கும் சட்டமூலம் என்ற விஷச் செடியை வேருடன் அழிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பிவிதுரு ஹெலஉருமயவின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பி. யுமான உதய கம்பன் பில அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) இடம்பெற்ற நீதிமன்றம்,நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் உள்ளிட்ட நீதிமன்றத்துடன் தொடர்புடை ஐந்து சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இந்த அழைப்பை விடுத்த அவர் மேலும் பேசுகையில்,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பதுளையில் பாரிய மண்சரிவு

பதுளை- பண்டாரவளை வீதியின் உடுவரை 7ஆவது மைல் கல் பகுதியில் செவ்வாய்க்கிழமை (09) இரவு பாரிய மண்மேடு சரிந்ததால் அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ்வீதியினூடான அனைத்து பொது போக்குவரத்து சேவைகளும் மாற்று வீதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. குறித்த வீதியில் வீழ்ந்துள்ள மண்மேட்டினை அகற்றும் பணியில் ஜேசிபி இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பண்டாரவளை, உடுஹுல்பொத்த பகுதியில் உள்ள வாகன திருத்துமிடத்தின் மீது பாரிய மண்மேடு புதன்கிழமை (10) சரிந்து வீழ்ந்ததன் காரணமாக வாகன திருத்துமிடத்திற்கு வருகை தந்திருந்த சொகுசு ரக வாகனங்கள் இரண்டும், வேன் ஒன்றும் மண்ணில் புதையுண்டுள்ளன. வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

பதுளை- செங்கலடி வீதியின் 20 ஆவது மைல்கல் பகுதியிலும் மண்சரிவு அனர்த்தம் தொடர்வதால் மக்கள் அச்சத்துடன் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், அருவிகளும், நீரோடைகளும், ஆறுகளும் பெருக்கெடுத்துள்ளன.

# புதன் வரை இடைநிறுத்தம்

வெள்ள அனர்த்தம் தொடர்பில் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதோடு, பல்கலைக்கழக தாழ் நில பிரதேசத்தில் காணப்படுகின்ற அசையும் சொத்துக்களைப் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு நிருபர்கள்

# மீண்டும் மூடப்பட்டது

மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பயணிகளும் வாகன ஓட்டிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். கொழும்பிலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் கிரித்தலே, எலஹெர, பகமுனை, தெஹியத்த கண்டிய வீதி ஊடாக பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் கடந்த 29ஆம் திகதி முதல் திறக்கப்பட்டு சில தினங்கள் மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலை சுமார் ஒரு வாரமளிவில் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் அடை மழை பெய்யத் துவங்கியுள்ளதால் மகாவலி கங்கையும் பெருக்கெடுத்த நிலையில் கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதி போக்குவரத்திற்கு மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது.

# 30 பேர் மீட்பு

பொலன்னறுவை மற்றும் அம்பலாங்கொடை பிரதேசங்களில், பௌத்த தத்துவம் எனக் கூறி, பத்து வருடங்களாகக் கட்டுக்கதைகளைப் பரப்பி வருவதாகக் கூறப்படும் ருவன் பிரசன்ன என்ற நபர் தொடர்பில் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து ஆரம்பித்த விசாரணையின் போதே, குறித்த 30 பேரும் இனங்காணப்பட்டுள்ளதுடன், இக் குழுவில் சில பிக்குகளும் உள்ளடங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த முப்பது பேரை அவர்களது மூட நம்பிக்கை தொடர்பிலான கருத்துக்களிலிருந்து மீட்பதற்காகப் பல திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பெண் கொலை; ஆண் கைது

கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிலியந்தலை, மடபட ஜம்புரலிய பிரதேசத்தில் வசிக்கும், ஒரு பிள்ளையின் தாயான துலாஞ்சலி அனுருத்திகா, வைத்தியர் ஒருவரின் மனைவியாவார். கஹதுடுவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் வைத்தே இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்றது.

கொலைக்குப் பின்னர் வெளிநாட்டிற்குத் தப்பிச் செல்வதற்காக சந்தேகநபர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் சகோதரன் மற்றும் போதைப்பொருள் வியாபாரி என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப் பயன்படுத்திய கூரிய ஆயுதங்கள் மற்றும் அதற்குப் பயன்படுத்திய கார் என்பன தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் களமிறங்குவார்

செப்டெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலும் 2025 ஜனவரியில் பொதுத் தேர்தலும் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது.

தேசிய கட்சியின் முகாமைத்துவ சபை அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில், கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன மற்றும் தவிசாளர் வஜிர அபேவர்தன ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பங்கேற்பில், செவ்வாய்க்கிழமை (09) இரவு நடைபெற்றது.

# இளவரசி ஆன் பாதம் பதித்தார்

அவருடன் அவரது மருமகன் இளவரசர் வல்லப உட்பட 07 பேர் கொண்ட தூதுக்குழுவும் வந்திருந்தது. அவர்களை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீதா அரம்பேபொல இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் குழு வரவேற்றது.

நீர்கொழும்பு ஹரிச்சந்திர நியூஸ்டெட் பெண்கள், விஜயரத்தினம் மற்றும் அல் ஹிலால் தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் சிறு குழு மற்றும் பல்வேறு மலையகம் மற்றும் கீழ் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நடனக் கலைஞர்கள் வரவேற்பு நடனங்களை ஆடி வரவேற்றனர்.

விமானத்திலிருந்து இறங்கிய இளவரசிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன், விமான நிலையத்தின் தங்க நினைவு குறிப்பேட்டில் வருகையின் நினைவைப் பதிவிட்டார்.

விமான நிலையத்தில் உள்ள சிறப்பு விருந்தினர் அறையில், இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் பின்னர், விசேட வாகன அணிவகுப்பில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையையும் அவதானித்தார். சுமார் ஒரு மணிநேரத்துக்குப் பின்னர் கொழும்புக்குப் பயணித்தார்.

# "மிகவும் ஆபத்தானது"

1983இல் ஜே.வி.பியினரை தடை செய்தனர். ஆனால், ஜனநாயக ரீதியில் அரசியல் செய்கின்றோம். வடக்கில் பிரச்சினைகள் ஏற்பட்டது ஏன்? தவறான தீர்மானங்களே இளைஞர்கள் ஆயுதம் ஏந்த தூண்டியது. உலக நாடுகளில் பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளது. ஆனால் இங்கே உண்மையில் எதிரான அரசியல் சிந்தனைகளைக் கொண்டுள்ளவர்களை ஒடுக்கவே பயன்படுத்துகின்றனர்.

மக்கள் வீதிக்கு இறங்கும் போது அவர்களை ஒடுக்க இதனைப் பயன்படுத்தவே முயற்சிக்கின்றனர். வரலாற்றில் இதற்கான அனுபவங்கள் உள்ளன. இதனால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மிகவும் ஆபத்தானது என்றே கூற வேண்டும் என்றார்.

# "மக்களை வதைக்கும்"

இதேபோன்றுதான் ஏற்கெனவே இருந்த பயங்கரவாத தடைச் சட்டமும் தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் ஒன்றுதான். இந்த நாட்டின் மக்களை இது பாதிக்கச் செய்யப் போகின்றது என்பதனையே இந்த சட்டமூலம் காட்டுகின்றது.

1978ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் 44 வருடங்களை நெருங்கியுள்ளது. இந்த நாட்டில் பல்வேறுபட்ட இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டுள்ளனர். மூன்று இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போகவும் செய்யப்பட்டுள்ளனர். 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் இந்த மண்ணிலிருந்து துடைத்தெறியப்பட்டுள்ளனர். ஜேவிபி போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கையின் வரலாறு இந்த சட்டம் எவ்வாறு கொடூரமானது என்பதனை காட்டியுள்ளது.

இதேவேளை அரகலய போராட்டம் இந்த அரசாங்கத்திற்கு பெரும் அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. ஜனநாயக வழியிலான போராட்டத்தை அடக்குவதற்கு இந்த சட்டமூலம் ஊடாக திட்டமிடப்படுகின்றது. இலங்கை போதைப் பொருளில் மூழ்கிப்போயுள்ளது. இதற்கு சட்டங்களைக் கொண்டு வந்து அதனைத் தடுப்பதற்கு முடியாதுள்ளது. நீங்கள் கொண்டுவந்துள்ள இந்த சட்டம் மக்களுக்கு திருப்தியளிப்பதாக இல்லை.

இந்த நாட்டில் இனவழிப்பு மற்றும் பல்வேறுபட்ட போர்க்குற்றங்களைத் தமிழர்கள் சந்தித்துள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கும், சரணடைந்தவர்களுக்கும் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை.

இராணுவத்தினரிடம் சரணடைந்த மற்றும் ஒப்படைக்கப்பட்ட சாட்சியங்கள் இருந்தும் அவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களின் குடும்பத்தினருக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. வவுனியா மாவட்ட காணாமல் போனோர் சங்கத்தின் தலைவி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். எந்த சட்டம் தனது பிள்ளைகள், கணவன் மீது பாய்ந்ததோ அந்த சட்டம் இப்போது குடும்ப உறுப்பினர்களுக்கும் பாய்கின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தால் எந்தளவுக்கு நாடு சீரழிந்துள்ளது. இந்த நாடு இன்னும் திருந்துவதாக இல்லை. சிங்களத் தலைவர்கள் ஏன் இன்னும் மனிதாபிமான ரீதியில் சிந்திப்பதில்லை.

இன்னும் உங்களிடம் குரோதம் உள்ளது. சிங்கள, பௌத்த மேலாதிக்க எண்ணம், இனவிரோத செயற்பாடுகள் தீர்வுக்கும் வராதவரையில் என்ன சட்டத்திருத்தங்களைக் கொண்டுவந்தாலும் இந்த நாட்டில் உள்ள பல்லின மக்களை ஒன்று சேர்க்க முடியுமா? யுத்தம் முடிந்தும் இன்னும் சமாதானத்தை உங்களால் அடைய முடியவில்லை. சமாதானத்திற்குச் செல்ல இன்னும் நீண்ட தூரம் உள்ளது. அதில் ஒரு குறுகிய பகுதியையேனும் எட்டிப்பிடிப்பதற்கு நாட்டின் தலைவர்களுக்கோ, ஜனாதிபதிக்கோ இன்னும் சிந்தனை வரவில்லை. தயவு செய்து எண்ணங்கள், சிந்தனைகளை மாற்றுங்கள் என்று கோருகின்றோம்.

இந்த சட்டங்கள் சிங்கள பௌத்தத்தையும் சிங்கள இன செயற்பாடுகளையும் மேலோங்கிக் கொண்டு செல்கின்ற சட்டமாக இருக்கின்றதே தவிர இங்குள்ள பல்லின மக்களை அனைத்து செல்லும் சட்டமாக இல்லை என்பதனையே நாட்டின் கடந்த கால வரலாறுகள் கூறுகின்றன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நியாயமானதா? சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான யுக்தியே. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் இல்லை. மட்டக்களப்பு மயிலத்தமடு விவகாரத்தில் ஜனாதிபதியினால் பண்ணையாளர்களுக்கு நீதியான தீர்வை வழங்க முடியவில்லையே. வடக்கு, கிழக்கில் 72க்கும் மேற்பட்ட பௌத்த விகாரைகள் சிங்கள, பௌத்த மக்கள் இல்லாத இடங்களில் அமைக்கப்படுகின்றது. இந்த சட்டங்கள் என்ன செய்கின்றன. அவை சிங்கள மக்களையும் சிங்கள அரச இயந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவா செய்யப்படுகின்றன. இந்த சட்டத் திருத்தங்கள் மக்களின் ஆன்மாக்களை வாழ விடுமா? இந்த நாட்டின் நீதியைச் சட்டத்தால் கொண்டு வர முடியாது. மனது, எண்ணங்களை மாற்றுங்கள். இல்லாவிட்டால் என்ன சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அது இன்னுமோர் இனத்தை அழிப்பதற்கே ஆகும் என்றார்.

# காலநிலை சீர்கேட்டால் மரக்கறிகள் எகிறின

விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கிருமிநாசினிகள் இரசாயன உர வகைகள் என்பவற்றின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

உற்பத்தி குறைவடைந்தமை காரணமாகக் கொழும்பு உட்பட ஏனைய நகரங்களுக்கு ஏற்றுமதிச் செய்யப்படுகின்ற மரக்கறிகளின் அளவும் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக லொறி உரிமையாளர்களும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர்.

ஏனெனில், கொழும்பு மற்றும் பிற நகரங்களை நோக்கிச் செல்கின்ற லொறிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன. கொள்வனவு திறன் மற்றும் குறைவான உற்பத்தி போன்ற விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன.இது தொடர்பாக அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை முன்வைக்கின்றார்கள்.



# 'சீசன்' இரத்து தவறான முடிவு

ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீசன் சீட்டுக்களின் செல்லுபடித் தன்மையை உடனடியாக இரத்துச் செய்ய இலங்கை போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் தீர்மானித்துள்ளார்.

ஜனவரி 8 ஆம் திகதி போக்குவரத்து சபைக்கு 66 ஆண்டுகள் பூர்த்தியான இச்சந்தர்ப்பத்தில், இவ்வாறான செயல் மூலம் மாணவர்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். விடுமுறை ஒரு மாதமாக இருந்தாலும், மாணவர்களுக்கு மேலதி வகுப்புகள் நடக்கின்றன.இந்த புதிய விதிமுறையின் மூலம் வார இறுதி நாட்களில் சீசன் டிக்கெட்டுகளை பயன்படுத்துவதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்வது தவறு என்பதால்,இரத்துச் செய்யப்பட்ட சீசன் டிக்கெட்டுகளை மீண்டும் செல்லுபடியாக்க வேண்டும் என்றார்.

# "விஷச் செடியை வேருடன் அழிப்போம்"

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளிவிவகார அமைச்சர் கடந்த முதலாம் திகதி வெளியிட்டுள்ளார். உண்மையைக் கண்டறியும் விவகாரம் நீதியமைச்சுடன் தொடர்புடைய நிலையில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஏன் வர்த்தமானியை வெளியிட வேண்டும் ?பிரிவினைவாத கொள்கையுடைய மேற்குலக நாடுகளில் நோக்கங்களுக்கு அமையவே வெளிவிவகாரத்துறை அமைச்சர் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் மாதிரியிலான ஆணைக்குழுவை அமைப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.ஆனால் அது உண்மையல்ல, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரைச் சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் முயற்சிகளுக்கு வலு சேர்க்கும் வகையில் தேசிய மட்டத்தில் இவ்வாறான சட்டங்களை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் 17 ஆயிரம் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டது. தண்டிக்கப்பட வேண்டியவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினரைத் தண்டிக்கும் வகையில் சட்டமியற்றுவது நியாயமானதா? .ஆகவே இராணுவத்தினரைவஞ்சிக்கும் இந்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கும் சட்டமூலம் என்ற விஷச் செடியை வேருடன் அழிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

# 50வது நினைவேந்தல்

இதேவேளை, 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ உயரதிகாரிக்கு விளக்கமறியல்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவ உயரதிகாரி ஒருவருக்கு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு புதன்கிழமை (10) உத்தரவிட்டுள்ளது.

கொலைச் சம்பவமொன்று தொடர்பாக குறித்த இராணுவ அதிகாரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தனது வரவைப் பதிவு செய்ய வேண்டும் மற்றும் தனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவை குறித்த இராணுவ அதிகாரி அவமதித்ததன் காரணமாக நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் விளக்கமறியல் உத்தரவை மேல் நீதிமன்ற நீதிபதி திருச்செல்வம் ஜோசப் பிரபாகரன் விதித்துள்ளார்.

மேற்படி, இராணுவ உயர் அதிகாரி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“அரச பெருந்தோட்ட நிறுவனங்களை

# தனியார்மயப்படுத்த இடமளியோம்”

■ எஸ்.கணேசன்



அரச பெருந்தோட்ட நிறுவனங்களை தனியார் மயப்படுத்த இடமளிக்கமாட்டோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

அரச பெருந்தோட்ட யாக்கம், மக்கள் பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் உள்ளிட்ட அரச பெருந்தோட்ட நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் மேற்படி நிறுவனங்களின் நிர்வாகத்தின் கீழ் தொழில் செய்யும் தொழிலாளர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே பாரத் அருள்சாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, “அரச பெருந்தோட்ட யாக்கத்தை தனியார் மயப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நகர்வு தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மக்கள் மத்தியிலும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவைகால கொடுப்பனவு உட்பட தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகைகளை மேற்படி நிறுவனங்கள் இன்னும் செலுத்தி முடிக்கவில்லை. அத்துடன், தொழிலாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கும் என்ன நடக்கும் என்பது தெரியவில்லை.

எனவே, கொடுப்பனவுகள் எல்லாம் செலுத்தப்பட்டு முறையான - நிலையான தீர்வு கிடைக்கும்வரை அரச பெருந்தோட்ட நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம். தொழிலாளர்களுக்கு சகலவிதமான ஏற்பாடுகளும் கிடைக்கப்பெறும் வரை ஓர் அங்குளமேனும் கை வைக்க இடமளிக்கமாட்டோம் என்றார்..

அத்துடன், வீடு அமைப்பதற்கான காணி, விவசாயத்துக்குரிய காணி என்பனவும் உறுதி செய்யப்பட வேண்டும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இது சம்பந்தமாக ஜனாதிபதி, பெருந்தோட்ட அமைச்சர், நிதி இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருக்கும் அறிவிக்கவுள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

# தாயின் பிறந்த நாளன்று சிசு மரணம்



■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

மட்டக்களப்பில் பிறந்து 5 மாதங்களேயான ஆண் குழந்தையொன்று தனது தாயின் பிறந்த நாளன்று செவ்வாய்க்கிழமை (09) உயிரிழந்துள்ளது.

செங்கலடி - ரமேஷ்புரத்தை சேர்ந்த இளம் தம்பதியினருக்கு முதல் குழந்தையாக இக்குழந்தை, குறைமாதத்தில் பிரசவிக்கப்பட்டு கடந்த 5 மாதங்களாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில், தாயின் 25ஆவது பிறந்த தினத்தன்று உயிரிழந்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மிகக் கஷ்டமான நிலையில் குழந்தையை பராமரிப்பதற்காக குழந்தையின் தந்தை கடன்பட்டு வெளிநாட்டுக்கு தொழில்வாய்ப்புப் பெற்றுச்சென்றுள்ள நிலையிலேயே குழந்தை உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.



10ஆவது வருட பூர்த்தி:

# புதிய பஸ் தரிப்பிடம் கையளிப்பு

கல்குடா பிரதேசத்தை மையமாகக் கொண்டு கடந்த 10 வருடங்களாக இயங்கிவரும் அல் இஸ்லாஹ் சமூக சேவை அமைப்பின் 10ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, ஓட்டமாவடி தேசிய பாடசாலைக்கு அருகாமையில் சேதமடைந்து காணப்பட்ட பஸ் தரிப்பிடத்தை அகற்றி, புதிய பஸ் தரிப்பிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அல் இஸ்லாஹ் சமூக சேவை அமைப்பின் தலைவர் எம். அனீஸ் அஹமட் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (7) இடம்பெற்றுள்ளது.

மனைவியின் செயலால்

# விபரீத முடிவெடுத்து கணவன் மரணம்

■ ஏ.எச்.ஹஸ்பர்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, ஏழுபுளியடி மீள்குடியேற்ற கிராமப் பகுதியில் புதன்கிழமை (10) காலை 6.30 மணியளவில் டைனமைன்டை வெடிக்க வைத்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெரிய கிண்ணியா கட்டையாறு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய உனைதீன் ரபாய்தீன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஏழுபுளிடியாளியில் வசித்து வந்த இவர், தனது மனைவி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக குவைட்டுக்குச் சென்று ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.



வெளிநாட்டில் இருந்து வந்து ஐந்து நாட்களேயான நிலையில், இருவருக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள், சில வாய் தர்க்கங்கள் ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்த மனைவி, தனது கணவனுடன் அன்புடன் வாழ விருப்பமில்லை என்ன கூறியுள்ளார்.

இதன் காரணமாக மனம் சோர்வடைந்த கணவன், வெடித்து செத்துப் போவேன் என பலரிடம் கூறியுள்ளார்.

கூறியபடியே புதன்கிழமை (10) காலை 6.30க்கு தனது இடுப்பில் வெடிக்கும் டைனமைன்ட் வெடிப்பொருளைக் கட்டிக்கொண்டு வெடிக்க வைத்து உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம், ஏழுபுளியடி மேல் குடியேற்ற கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 23 ஏக்கர் காணிகள் விடுவிப்பு

■ எம்.றொசாந்த்

வலி. வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில், அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**“ முப்படைகளின் வசம் உள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை**

# வடக்கில் பொங்கல் விழா

■ எம்.றொசாந்த்

வடமாகாண பொங்கல் விழா எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சி - பல்லவராயன்கட்டில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த பொங்கல் விழாவில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

குறித்த பொங்கல் நிகழ்வில் சம்பிரதாயபூர்வமாக புதிர் எடுத்து பொங்கல் இடம்பெறவுள்ளது. அதனை தொடர்ந்து பாரம்பரிய கலை நிகழ்வுகளின் இடம்பெறவுள்ளது.



வர்த்தக நிலையத்தில் தீ;

# பொருட்கள் முற்றாக நாசம்

■ சண்முகம் தவசீலன், நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணீரூற்று– முள்ளியவளை பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் புதன்கிழமை (10) அதிகாலை தீ பரவியுள்ளது.

குறித்த திடீர் தீ பரவலை அவதானித்த அப்பிரதேச மக்கள் விரைந்து செயற்பட்டு, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இருப்பினும் தீப்பரவல் காரணமாக வர்த்தக நிலையத்தில் இருந்த பல இலட்சம் பெறுமதியான பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு



மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாந்தீவு வாவியில் மீன்பிடிக்கச் சென்ற நபர் ஒருவர் இரண்டு நாட்களுக்கு பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (10) பதிவாகியுள்ளது.

ஈச்சந்தீவு- நாவற்காடு பகுதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான (42 வயதுடைய) மீனவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## விற்பனைக்கு

எதுல்கோட்டே பிரதான வீதிக்கு அருகில் வீடு மற்றும் வியாபார பாவனைக்கு ஏற்ற கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு. 3,500,000 - 5,000,000 தொடர்புக்கு: 075-9123031

# மூட நம்பிக்கைகளும் முட்டாள்தனமான முடிவுகளும்

உலகமானது நவீன போக்கை நோக்கி மிகவேகமாக நகர்ந்துகொண்டிருக்கும் தற்காலத்தில், 5G வயர்லெஸ் தொழில்நுட்பத்தை அடுத்து 6G க்குள் நுழைவதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை. அவற்றுக்கு அப்பால், ‘செயற்கைப் புலமை’யும்(AI) மிகவேகமாகப் பயணிக்கிறது.

எனினும், பழைமையான நம்பிக்கைகள் மக்களின் வாழ்வியலைப் பெரிதும் சவாலாக்கக் கூடிய ஒரு விடயமாக அமையப் பெறுகின்றது. கிராமப் புறங்களில் இப்பழைமையான சிந்தனையின் தாக்கம் எதிர்கால சமூகத்தை முன்னோக்கிச் செயற்பட விடாமல் முடக்கும். கிராமங்களில் மட்டுமன்றி, நகரங்களுக்கு மூட நம்பிக்கைகள் வியாபித்துள்ளன.

இது ஒரு தடைக் கல்லாகும்.

ஏதோவொரு சக்தி எல்லாவற்றையும் இயக்கிக்கொண்டிருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

எனினும், பலவற்றையும் இலகுவாக அடைந்துவிடலாம் என்ற சிந்தனை பலரிடத்தில் மேலோங்கி நிற்கின்றது. இது மூட நம்பிக்கையாகும். இன்னும் சிலர், மூளைச் சலவைச் செய்து ஏமாற்றிவிடுகின்றனர். இதில், மதமாற்றம் முன்னிலையில் நிற்கிறது.

‘சொர்க்கத்துக்குச் செல்வதற்காகப் பூமியில் உயிர் துறக்க வேண்டும்’ என்ற மூட நம்பிக்கையைப் பரப்பி, தன்னுயிரை மாய்த்துக்கொண்டதன் பின்னர், அவரது போதனையில் பங்கேற்றிருந்த எழுவர், ஒரே மாதிரியாக தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர். அந்த போதனையில் பங்கேற்றிருந்த இன்னும் 30 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இனங்காணப்பட்ட முப்பது பேரை அவர்களது மூட நம்பிக்கை தொடர்பிலான கருத்துக்களிலிருந்து மீட்பதற்காகப் பல திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த வேலைத்திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

விஷய ஞானம் இல்லாத ஒருவரை, இந்த வேலைகளை நன்கு செய்வார், திறம்படத் திறமைகளை வெளிப்படுத்துவார் ,என்று தேர்ந்தெடுத்து அமர்த்துவது ‘மூடநம்பிக்கை’ அவர் அப்படிச் செய்யாமல், எந்த வேலைகளைச் செய்யவும் தகுதியானவர் இல்லை என்று தெரிந்த பின்னும் அவருடைய தவறுகள் யாவற்றையும் சரியானவை, என்று முட்டுக் கொடுப்பது ‘முட்டாள்தனம்’

சமூக வலைத்தளங்களில் ஒன்றான வாட்ஸ் அப்பில் ஏதாவது ஒரு சமயத்தின் கடவுள் படத்தைப் பகிர்ந்து அதனை 25 பேருக்கு உடனே பகிர்ந்தால் ஏழு நாட்களுக்குள் நல்லது நடக்கும். அதையும் யோசிக்காமல் உடனே பகிர்ந்துவிடுவர் இதுவே இதுவரை பார்த்த உச்சக்கட்ட மூடநம்பிக்கையாகும்.

சமூக ஊடகங்களின் வருகைக்குப் பின்னர், புதுப்புது விடயங்களைத் தேடி பலரும் மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். இதற்கிடையே, சிலர் குழுக்களாக இணைந்து, நல்லபல விடயங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கின்றனர்.இன்னும் சிலர், யாரோ ஒருவர் அனுப்புகின்ற தகவல்களை, எவ்விதமான சிந்தனையும் இன்றி அப்படியே பகிர்ந்து விடுகின்றனர்.

தகவல் ஒன்றைப் பகிர்வதற்கு முன்னர், அவற்றின் உண்மைத் தன்மையைச் சோதிக்கவேண்டும். தேடிப் பார்க்கவேண்டும்.

இவ்வாறான மூட நம்பிக்கைகளைத் தொடரும் குடும்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த எண்ணங்கள், சிறு வயதில் இருந்தே பழக்கப்படுத்தப்பட்டவை. அதனை உடனே ஒழிக்க முடியுமா என்றால் நிச்சயம் இல்லை, உலகத்தின் நவீன போக்கை நோக்கிப் பயணிக்காத வரைக்கும் மூட நம்பிக்கையிலிருந்து பிரித்தெடுப்பது இயலாத காரியமாகும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம், மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘செயற்கைப் புலமை’யும் (AI) யுத்தங்கள் மீதான அதன் தாக்கமும்

கடந்த 4ஆம் திகதி தொடர்ச்சி குடியகல்வும் (அல்லது இடப்பெயர்வும்) இறப்பும் என்ற இரு விடயங்களும், இன்றைய சகாப்தத்தின் சர்வ இலட்சணம் பொருந்திய, வடுக்கள் நிறைந்த இரு முகங்களாகின்றன.

இவை, இன்றைய உக்ரைன், காசா போன்ற விடயங்களில், இன்னும் ஆழமாக வெளிப்படுவதாக உள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. (இதுவரை உக்ரைனிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்தோரின் தொகையானது ஆறு மில்லியனை தாண்டும் என ஒரு பதிவு கூறும் அதேவேளை, காசாவில் கொல்லப்பட்ட சிவிலியர் தொகை இருபதாயிரத்தைக் கடக்கின்றது என அப்பதிவு மேலும் கூறுகின்றது.

இதில் சிறுவர் சிறுமியரின் தொகை ஐயாயிரத்தை கடக்கின்றது எனவும் மயக்க மருந்து தட்டுப்பாடு காரணமாக அங்கே மயக்கமருந்தின்றி, சிறுவர்கள் உடலில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை கணக்கில் மாளாதவை என்றும் கூறப்படுகின்றது. நத்தார் தின பரிசளிப்பாக வான் வெளி தாக்குதலில், எழுபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக விபரங்கள் கூறுகின்றன. காயப்பட்டோர் எண்ணிக்கை கணக்கில் அடங்குவதில்லை. இச்சூழலில் இம்முடிவுகள் யாரால் எடுக்கப்பட்டன? எப்படி எடுக்கப்பட்டன? என்பதும் உலகம் எதை நோக்கி நகர்கின்றது என்பதும் கேள்வியாகின்றன.

இது போலவே, உக்ரைனின், மின்ஸ்க் சமாதான ஒப்பந்தமானது, நேரத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு ஒன்றே தவிர சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் பெற்றுக்கொள்ள செய்யப்பட்டவை அல்ல என்று முன்னை நாள் ஜேர்மனிய ஜனாதிபதி ஏஞ்சலோ மேர்கெலும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனும் கூட்டாகக் கூறுவதும் உக்ரைன் போரானது திட்டமிடப்பட்ட ரீதியில் கட்டவிழ்க்கப்பட்ட ஒன்றுதான் என்பதை நிரூபிக்கின்றது காசா போன்றே. அதாவது, இம்முடிவுகள் யாரால், எப்படி எடுபடுகின்றன என்பதிலேயே செயற்கை புலமையின் மறைகர நகர்வும் உள்ளடங்குகின்றது.

> **நாகசகி – ஹிரோசிமா போன்று தன்னிச்சையாக நடத்தப்படும் தாக்குதல்கள் போன்றில்லாமல், எதிர்த் தளங்களிலிருந்து, எதிர் எதிர் சக்திகள் செயல்படுவதாகவே இருக்கின்றன**

> **முடிவுகள் ஒரு பக்கமாயும் சங்கிலித் தொடர் தாக்கங்கள் மறுபுறமாயும், அமையப் பெறும் காலகட்டத்தில் செயல்கள், AI யின் உதவியால் கைமீறிப் போவதும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே**

சுருக்கமாகக் கூறினால், சர்வதேச சட்டதிட்டங்களை உதறித்தள்ளி அல்லது அவற்றைப் புறக்கணித்து எழக்கூடிய இவ்வகைப் போக்குகளில் செயற்கைப் புலமைகளின் பாத்திரம் எவ்விகிதாசாரமாகிறது என்பதே கேள்வியாகின்றது.

ஆனால், மேலே குறித்தவாறு, செயற்கைப் புலமையின் ஆதிக்கமானது இன்று மேற்கத்திய நாடுகளின் ஏகபோக சொத்தாகக் காணப்படவில்லை என்பதிலேயே ஆதிக்க சக்தி தொடர்பிலான சந்தேகங்கள் மேலெழுகின்றன எனலாம். உதாரணமாக, செங்கடலில் ஹௌதீகளை, கொன்றொழிக்கும் மேற்கின் கூட்டுப்போர் நடவடிக்கைகளிலிருந்து பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகள் விலகி விட்டதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.(24.12.2023)

இது காசாவின் பின்னணியில், இஸ்ரேலின் வர்த்தக கப்பல்கள், ஹௌதீகளிடமிருந்து பாதுகாப்பாக எப்படி பயணங்களை மேற்கொள்ளப்போகின்றன. தமது கப்பல்களை அது எப்படிக் காப்பாற்றிக் கொள்ளப் போகின்றது என்பது கேள்வியாகின்றது. சுருக்கமாகக் கூறினால் காசாவின் நகர்வு ஹமாஸைக் கொன்றொழிக்கும் திட்டத்துடன் களமிறக்கப்பட்டதாக இருக்கலாம்.

ஆனால், செங்கடலில் அதனது எதிர் முகத்தை விரிப்பதாக அது உள்ளது என்றே கூறலாம்.

அதாவது இஸ்ரேலின் கப்பல் பயணங்கள் காசா பின்னணியில் முன்னரேயே தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது காசா தாக்குதலானது செங்கடலின் பின்னணியில் ஆய்ந்திருக்கப்படல் வேண்டும் என்பதுவே கேள்விகளின் சாரம் ஆகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நாகசகி - ஹீரோசிமா போன்று தன்னிச்சையாக நடத்தப்படும் தாக்குதல்கள் போன்றில்லாமல், எதிர் எதிர்த் தளங்களிலிருந்து, எதிர் எதிர் சக்திகள் இன்று செயல்படுவதாகவே இருக்கின்றன. அதாவது செயற்கைப் புலமைகளின் கையாளுகையானது எதிரெதிர் தளங்களில் செயல்படுவது கணக்கிலிடப்படுகின்றதா என்பதுவே கேள்வியின் சாரமாகின்றது.

வேறு வார்த்தைகளில் கூறுவதனால், காசா என்ற போர் முனையின் விவகாரம் (உக்ரைனுக்கு அடுத்தபடியாக) செயற்கைப் புலமைகளினால் ஏற்படுத்திய ஒன்றெனில் அதன் வெற்றியின் நிர்ணயம் அப்படி ஒன்றும் எளிதாக இருக்கப்போவதில்லை. எதிரெதிர் சக்திகள் தத்தமது செயற்கை புலமை நுட்பங்களை அவிழ்த்து விடவே செய்கின்றன. அதாவது, லப்ரோவ் கூறியவாறு, F-16 விமானங்கள், அணுகுண்டுகளை ஏந்திவருவதால், அவற்றை அவை குறித்த கணங்களில் வீசி ஏறிய முயல்வதும், ரஷ்ய செயற்கைப் புலமை ஏற்பாடுகளால், அவை நொடியில் கண்டுணர்வதோடு விடயங்கள் முடிவதில்லை. இதற்குப் பதிலடியாக எதிர் நகர்வுகளை ரஷ்யாவின் செயற்கைப் புலமைகள் மேற்கொள்ளும் என்பதிலேயே உலகுக்கான நாசங்கள் உள்ளடங்குகின்றன. அதாவது இவை ஒரு சங்கிலித் தொடரான சம்பவங்களை அரங்கேறப் போகின்றன. இதனாலேயே, புட்டின் கூறும் உடன்படிக்கையின் அவசியமும் தோற்றம் பெறுகின்றது. தொண்டு கிழடுகள் இன்று அடுத்தடுத்ததாய் அதிரடி முடிவுகளை எடுப்பதும், நிகழ்வுகள் ஒரு தலைப்பட்சமாக, உலகைக் கவ்வி சர்வதேசச் சட்டங்களை, சர்வதேசக் கடப்பாடுகளை இன்று புறந்தள்ளுவதும் செயற்கைப் புலமையின் அரசியல் பிரவேசத்தை எமக்குக் காட்டுவதாக உள்ளது.

ஓர் உடன்படிக்கை இல்லாத பட்சத்தில், இவற்றின் வெற்றி தோல்வி என்பது ஒரு போர்முனையிலேயே நிரூபணம் ஆக வேண்டிய சமாச்சாரம் ஆகின்றது. இரண்டாம் உலகப் போரின் நாசங்களைப் போலவே இச்சூழ்நிலையிலேயே, ஒருபுறம், புட்டின் மோடி இம்ரான் போன்ற தலைவர்கள் செயற்கைப் புலமையானது தத்தமது நாடுகளுக்கு அன்னியமாகாத ஒன்றே என மறைமுகமாகக் கூறுகையில், அணு ஒப்பந்தத்தைப்போல் ஓர் ஒப்பந்தம் தேவையாக இருக்கின்றது, என்பது மறுக்க முடியாததாகின்றது. மறு புறத்தில், துவாரகாவின் உரை போன்ற உரைகள் அரங்கேறுவதும் தவிர்க்க முடியாததாக உள்ளது.

இதுபோலவே, மிக அண்மையில், இவ்வருட முடிவில், ரஷ்யா, உக்ரைன் மீது தொடுத்த 150க்கும் மேற்பட்ட ஏவுகனைட்ரோன் தாக்குதல், இவ்வருடத்தின் அதியுயர் நட்டத்தையும் செலவீனத்தையும் காட்டுவதாயுள்ளது. (127 கோடி டொலர் அதாவது, 1, 273,2020,000 டொலர்கள் என மதிப்பிடப்படுகிறது) இப் பின்னணியில் AIயை களமிறக்குவது தவிர்க்க முடியாத நிகழ்வாகின்றது. மொத்தத்தில், அதிரடி முடிவுகள் ஒரு பக்கமாயும், சங்கிலித் தொடர் தாக்கங்கள் மறுபுறமாயும், அமையப் பெறும் காலகட்டத்தில் செயல்கள், AI யின் உதவியால் கைமீறிப் போவதும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே.

நன்றி: ஜோதிகுமார்

## கடிதங்கள்

### வரி செலுத்துவோருக்கு சிக்கல்

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக பழங்களை விற்பனை செய்பவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் அந்த சந்தையில் சட்டப்பூர்வமாக மாநகரசபைக்கு வரி செலுத்தி வியாபாரம் செய்யும் கடைக்காரர்கள் தமது வியாபாரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்போதும் நகராட்சிக்கு வாடகை செலுத்த முடியாமல் மத்திய சந்தையில் உள்ள 10 கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும், மேலும் இருபது கடைகளுக்கு மின்சார சபையால் சிவப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர்.

கண்டி மாநகர சபைக்கு வரி செலுத்தாமல் மத்திய சந்தைக்கு முன்பாக உள்ள நெடுஞ்சாலையில் வியாபாரம் செய்யும் அனுமதியின்றி வியாபாரம் செய்யும் வியாபாரிகளை அகற்றுமாறு மாநகரசபை அதிகாரிகளிடம் எத்தனை முறை கோரிக்கை விடுத்தும் எதற்கும் செவிசாய்க்கவில்லை என வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கண்டி மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக்கவிடம் வினவியபோது, தினமும் சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு சட்டவிரோத வர்த்தகர்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

– ஷேன் செனவிரத்ன



# வெளிவயலும் செம்மறிப்பண்ணையும்






சு.கிசோபனா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்


தற்போது வயல் நிலங்களில் வெள்ளைக் கம்பளத்தை விரித்தது போல் செம்மறியாடுகள் வலம் வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பயிர்கள் நாற்றுவதற்கு முன்பு நிலங்களில் செம்மறிப் பண்ணைகளை அடைப்பது வழமை. ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. செம்மறியாடுகளை வயல் நிலங்களில் அடைப்பதன் மூலமாக வயல் நிலங்களுக்கான பசளையினை பெறமுடிகின்றது. வீடுகளில் சேமித்து வைத்திருக்கின்ற குப்பைகளினை கொண்டு வந்து வயல் நிலங்களில் கொட்டி பரப்புவதினை விட செம்மறியாடுகளை நேரடியாகவே கொண்டு வந்து வயல் நிலங்களில் அடைக்கின்றனர். நிலத்தினுடைய உரிமையாளர் தனக்கு தேவையான பசளைகளின் பொருட்டு வயல் நிலங்களில் ஆடுகளை அடைப்பதற்கான அடைகட்டி ஆடுகளைஅடைக்கின்றனர். நிலத்தினுடைய பரப்புக்கு ஏற்ப செம்மறி ஆடுகள் கொண்டு வரப்பட்டு அடைக்கப்படுகின்றது.

நாம் ஊராடுகளை வீடுகளில் கட்டி அதற்கென குடிசைகளை அமைத்து வளர்க்கின்றோம். ஆனால், செம்மறியாடுகளை அவ்வாறு வளர்ப்பதில்லை. இந்த ஆடுகளைக் கட்டுவதும் இல்லை, இதற்கென குடிசைகளும் அமைக்கப்படுவதில்லை. வெட்டை வெளிகளில் ஆடுகளை அடைகின்றார்கள். இந்த ஆடுகளை மேய்த்தல் ஆடுகள் என்று கூறுவார்கள். வயல் நிலங்களில் இருக்கின்ற புற்களை மாத்திரமே இவை உணவாக உட்கொள்கின்றன. வயல்வெளிகள் குளங்கள் என திரிந்து தமக்கான உணவுகளைப் பெற்றுக்கொள்கின்றன. செம்மறியாட்டு மந்தை வளர்ப்பானது யாழ் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


வீடுகளில் செம்மறியாடுகளை வளர்ப்பது தொடர்பாக அளவெட்டிக் கிராமத்து விவசாயினான சுந்தரம் குறிப்பிடுகையில், ‘செம்மறியாடுகளை வீட்டில் வளர்ப்பதானது வீட்டிற்குச் செல்வத்தினைக் கொடுக்கும். அதாவது செம்மறிப்பட்டியானது எவ்வாறு அதிகரிக்கின்றதோ அதனைப் போலவே வீட்டிலும் செல்வம் அதிகரிக்கும் என்று கூறுவார்கள். அத்துடன் வீட்டில் இருப்பவர்களுக்கு ஏதாவது உயிராபத்து நிகழ்வதனை தடுப்பதற்கு இந்த ஆடுகளை வளர்க்கின்றோம்’ என்று குறிப்பிட்டார்.

அளவெட்டியில் செம்மறிப்பட்டியினை வைத்திருக்கும் முத்துத்தம்பி தில்லைநடராஜ் குறிப்பிடுகையில், “நான் இத்தொழிலைப் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருகின்றேன். 13 வயதிலிருந்து செம்மறியாடுகளை வளர்த்து வருகிறேன். எனக்கு இப்போது 66 வயதாகின்றது. என்னுடைய அம்மாவின் தந்தை ஆரம்பத்தில் சிறிய அளவு செம்மறியாட்டுப் பட்டியை வைத்திருந்தார். பின்னர் அப்படியே பெருக்கி பெருக்கி தற்போது எம்மிடம் 2000இற்கும் அதிகமான செம்மறியாடுகள் இருக்கின்றன. காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணிவரை செம்மறியாடுகளை ஒவ்வொரு இடமாகக் கலைத்துச் சென்று மேய்கின்றோம். ஒரு மாதத்திற்கு இரண்டு இலட்சங்களுக்கு அதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றேன். இந்த ஆடுகளை வேறு மாவட்டங்களுக்கு இறைச்சிக்காக அனுப்புகின்றேன். இந்த ஆடுகள் ஒரு வருடத்தில் இரண்டு குட்டிகளை ஈற்ற முடியும். குட்டிபோடுவதற்கான காலமாக 6 மாதம் காணப்படுகிறது. குட்டிகளையும் விற்கின்றோம். சிலர் வளர்ப்பிற்காக வாங்கிச் செல்வார்கள். என்னுடன் என்னுடைய மகனும் பேரப்பிள்ளைகள் இருவரும் ஆடுகளை மேய்கின்றபோது, என்னுடன் வருவார்கள். பறியிச் சாதி செம்மறியாடுகள் எனக் குறிப்பிடுவார்கள். அதாவது எருக்களுக்காக பயன்படுத்தப்படுவதனால் இவ்வாறு கூறுவார்கள். கம்பளிகள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் செம்மறியாடுகள் இவையல்ல. நிலத்தின் உரிமையாளர் செம்மறியாடுகளை வயல் நிலத்தில் அடைப்பதற்கு ஒரு ஆட்டுக்குத் தலா 25 ரூபாய் வீதம் எத்தனை ஆடுகள் அடைக்கப்படுகின்றதோ அதற்கு ஏற்ப பணத்தினை கொடுக்கின்றார்.

இந்த பட்டியைக் காப்பதற்காக இரவு வேளைகளில் கூடாரங்களை அமைத்து பட்டியின் அருகிலேயே தங்குகின்றோம். பட்டியை வெளியிடங்களுக்கு மேய்ச்சலுக்காகக் கொண்டு செல்கையில் அதிகமான செம்மறியாடுகள் களவாடப்பட்டுள்ளன. நான் செம்மறிப்பட்டியினை மயிலிட்டி, தெல்லிப்பழை, அளவெட்டி, கைதடி, உரும்பிராய், பலாலி, கந்தரோடை என கொண்டு சென்று மேய்ச்சலிடுகின்றேன். இந்த ஆடுகளை வீதியோரங்கள் வழியான நடைவழியாகக் கொண்டு சென்று தான் மேய்கின்றேன். செம்மறியாடுகள் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இந்த மந்தைகளுக்கான மருத்துவச் செலவானது அதிகமாகக் காணப்படுகிறது. சில குறிப்பிட்ட காலத்தின்போது, ஆடுகளுக்கு நோய் ஏற்படும். இதன்போது, கை மருந்துகளினை பயன்படுத்துவோம். அதற்கும் சரியாகவில்லையெனில், ஒரு ஆட்டினை கொண்டு சென்று காட்டிவிட்டு அதற்குக் கொடுக்கப்படுகின்ற மருந்தினை மற்றை ஆடுகளிற்கும் வாங்கிக் கொடுக்கின்றோம்’ எனக் குறிப்பிட்டார்.

வயல் வெளிகளில் பயிர்கள் பயிரிடப்படுவதற்கு முன்னர் செம்மறியாடுகளைக் கொண்டு வந்து மேய்க்கின்றார்கள். பயிர்கள் பயிரிட்ட பின்னர் தோட்ட நிலங்களுக்குக் கொண்டு சென்று மேய்க்கின்றார்கள். பின்னர் வயல் நிலங்களில் பயிர்கள் அறுவடை செய்த பின்னர் வயல் நிலங்களுக்குக் கொண்டு செல்கின்றார்கள். பொதுவாகவே செம்மறிப்பட்டிகளை வளர்ப்பவர்கள் தங்களிடம் இருக்கின்ற

ஆடுகளைப் பற்றிய எண்ணிக்கை மற்றும் தமது ஆடுகளைப் புகைப்படம் எடுப்பதனையோ விரும்பமாட்டார்கள். இது தொடர்பாக அளவெட்டி கிராமவாசியான தங்கராசா குறிப்பிடுகையில், ‘தங்களிடம் இருக்கின்ற ஆடுகள் பற்றிய தகவல்களைக் குறிப்பிடுகின்றபோது அவர்களுடைய ஆட்டுக்கு கண்படுகின்றது. இதனால் பட்டிகள் இறந்து விடுகின்றன’ எனக் குறிப்பிட்டார்.



# அந்த இரவு






தெட்சணாமூர்த்தி கரிதரன்
(சம்பூர் சமரன்)


தலைநகரில் குண்டு வெடித்ததால் நாட்டின் முக்கிய உயர்நிலை பிரமுகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அனைத்து வானொலிகளிலும் விசேட செய்தி பரபரப்பாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ஊரெங்கும் அதே பேச்சு, எப்போது வேண்டுமானாலும் அசம்பாவிதம் நடக்கக் கூடும் என்ற பீதி எல்லோர் மனதிலும் பயத்தைக் கூட்டியது.

சிலர் மரத்தின் கீழ் பாதுகாப்பான பங்கர்களை தோண்டினார்கள். அந்திசாயும் வேளையில், சூரியன் அன்று வழமையான நேரத்திற்கு முன்னரே மறைந்து விட்டான் போல, வானில் இரும்புப் பறவையாய் போர் விமானத்தின் இரைச்சலும் சிறிது நேரத்தில் பல்குழல் பீரங்கி சத்தங்களும் காதுகளைப் பதம் பார்த்தன.

ஊர் முழுவதும் ஒரே இரைச்சல், மக்களின் கூச்சலும், வாகன இரைச்சலும் நிசப்தத்தை கொன்று விட்டன. பீரங்கிகளின் சத்தம் சற்று விட்டு விட்டுக் கேட்டன. பயம் விடாமல் பற்றிக் கொண்டது. இனி இங்கிருந்தால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது கடினம் என்று ஊரோடு அயல் கிராமங்களை கடந்து, எங்கே? அமைதி கிடைக்கும் எங்கே? பீரங்கி சத்தமில்லாமல் இருக்கும் என மக்கள் திரள் திரளாக புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கையிலே மிகவும் முக்கியமான தமது ஆவணங்களையும், ஆபரணங்களையும் எடுத்தவர்கள் சிலர், அதைக்கூட எடுக்காமல் உயிரை மட்டும் காத்துக்கொள்ள எத்தனித்து புறப்பட்டவர் சிலர், ஏழு மணி கடந்து போய்க்கொண்டிருந்த இரவின் பயணத்தில் இவர்களும் பயணம் செய்தார்கள். இந்த இரவு இவர்களின் வாழ்க்கையை வேறொரு திசையில் கொண்டு செல்ல காத்திருக்கின்றது. எங்கே? என்ற வினாவோடு விடையைத் தேடிக்கொண்டு தடுமாறிய பயணம்.

அந்தப் பயணத்தில் ஒரு பங்காளனாய் அந்த எட்டு வயதுச் சிறுவன், கூட்டத்தோடு கூட்டமாய் செல்கிறான். அவனுக்கு இப்பயணம் புதிது. போகும் வழியில் மின்சாரக் கம்பங்கள் உடைந்து விழுந்திருக்கின்றன. கால்நடைகள் இறந்து கிடந்தன. சில வீடுகள் இடிந்து சரிந்து இருக்கின்றன. புதினமான ஓர் இரவு தான் இது அவனுக்கும். அச்சிறுவன் தனது தாயின் கையை பற்றிப் பிடித்துக் கொண்டு செல்கிறான். முன்னே அவனது அப்பாவும் மூன்று சகோதரிகளும் சுட்டி தம்பியும் செல்கின்றனர்.

“எங்கம்மா? நம்ம போறம் எல்லா சனமும் ஏன் வேகமா ஓடுறாங்க” என அவன் கேட்க, “குண்டு வெடிச்சதால நம்மட ஊருக்கு ஆட்லரி ஷெல் அடிக்கிறாங்க, அதான் எல்லோரும் வேற ஊருக்கு போறாங்க” என்று அம்மா அவனிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நிலைமை சற்று அவனுக்கு புரிகின்றது.

இருந்தாலும், இந்தக் கூட்டத்திலே தனது பள்ளித் தோழர்களை தேடுகின்றான். ஒருவருமே அவன் கண்ணில் அகப்படவில்லை. ஊர் மக்களின் ஓலமும், பேச்சு சத்தங்களும், வேகமான நடையும் பல செய்திகளைப் பல கோணங்களில் கொண்டு சென்றன. ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டே சென்றதால், அம்மாவின் கையை நழுவவிட்டு சற்று பின்தங்கி விட்டான். “தம்பி செந்தூரா சனமெல்லாம் போகுதுகள், குண்டு இதிலயும் விழுந்திடும் கெதியா ஓடி வா!...” “ஐயோ இதிலயும் குண்டு விழுமா என்னையும் கூட்டிட்டுப் போங்க” என்று செந்தூரன் அம்மாவின் கைகளை மீண்டும் பற்றிக்கொண்டான்.

நேரம் செல்லச்செல்ல வானிலே நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. சித்திரை மாத வெயில் பகலில் எரித்து, இரவில் தென்றலாய் வீசியது. இப்போதைக்கு மக்களுக்கு ஆறுதல் அந்த தென்றல் மட்டுமே. இருந்தாலும் சனக் கூட்டம் தென்றலை கிழித்து உயிர்பிழைக்க ஓடிக்கொண்டிருந்தது. சனநெரிசலில் எதிர்பாராத விதத்தில் குண்டு விழுந்தால் இந்தக் கூட்டத்தில் எத்தனை உயிர்கள் போகுமோ? பயமும், பதட்டமும் உள்ளத்தில் நுழைந்து கண்களிலும் வார்த்தையிலும் வெளிபட்டது.

பொதுவாக யுத்தம் ஒன்று நடக்கும்போது, அதிகம் பாதிப்புறுவது மோதுகின்ற படைகள் அல்ல அப்பாவிகளான மக்களே. அவ்வாறான பாதிப்பு இப்போது நெருங்கி வந்துவிட்டது. மக்களிடையே சலசலப்பு ஏற்படும்போது, அலறல் சத்தமும், அழுகையும் செந்தூரனின் மனதை நடுங்கச் செய்தன.

செந்தூரனின் அப்பாவிடம் அருகே சென்று கொண்டிருந்த ஊர்க்காரர் ஒருவர் கதைக்கும்போது, ஷெல் விழுந்து கொஞ்ச பேர் இறந்து, சிலர் காயப்பட்டதாகவும் சொன்னார். ஆனால், ஆட்கள் யார் யாரென்று என்று தெரியவில்லை எனவும் சொன்னார். இதைக் கேட்ட மற்றவர்களுக்கு தூக்கிவாரிப்போட்டது. தங்களது உறவுக்காரர்கள் அதில் மாட்டிக் கொண்டார்களோ! என பயந்து புலம்பினார்கள். சிலர் வாய்விட்டு கதறி அழுதார்கள். ஒரு நாளும் இந்த நிலை நமது ஊருக்கு வரக்கூடாது என்று சொல்லி இறைவனை எண்ணி மனம் நொந்து திட்டினார்கள். செந்தூரன் அவற்றையெல்லாம் கேட்டவனாக நடந்து கொண்டிருந்தான்.

பலர் கால்களில் செருப்பு கூட அணியவில்லை. அந்த வீதி இப்போது போல தார் இடப்பட்ட வீதிகள் அல்ல. அது வெறும் கிரவல் மற்றும் கற்களால் அமைக்கப்பட்டு இருந்தன. வீதியிலுள்ள கற்கள் செந்தூரனின் பெருவிரலை பதம் பார்த்து விட்டது. இரத்தம் வழிந்து காயத்தால் வலியைக் கொடுத்தது. அதைக்கூட பொருட்படுத்தாமல் அவனின் பயணம் அம்மாவின் கையோடு பற்றி பிடித்த வண்ணம் தொடர்ந்தது.

பாதுகாப்பான இடத்திற்கு விடிவதற்குள் செல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் மக்கள் கற்கள் காலில் குத்திக் கிழிப்பதைக் கூட பாராமல் நடந்தனர். இந்த உத்வேகத்திற்கு முக்கிய காரணம் பொழுது விடிந்தால் கிபீர் என்ற பறவை குண்டு மழை பொழியும், அந்தக் கொடூரத்திலிருந்து தப்பிக்கவே முடியாது. இந்தப் போராட்ட நடைகள் அதில் இருந்து தப்பிக்கவே இடம் பெற்றன. செந்தூரன் மேலே வானத்தை பார்த்துக் கொண்டிருந்தான். என்ன! ஆச்சரியம் நிலவும் அவனுடன் வருகின்றது. நிலவுக்கும் யுத்தம் பிடிக்கவில்லை போல, அதுதான் தன்னுடன் கூடவே வருகின்றதென எண்ணிக் கொண்டான்.



அந்த இரவில் முன்னொருபோதும் நடந்திடாத பாதையில் எத்தனை கால் தடங்கள், அந்த வீதியும் இப்போதுதான் நிறைந்த கால் தடங்களை கண்டிருக்கும். அவலத்தின் ஊர்வலம் அகதிகளை வரவேற்று ஆந்தையும் தவளையும் மாறி மாறி ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இது வரவேற்பா? இல்லை வரவிற்கும் அபாயத்தின் அறிவிப்பா? என்று எண்ணத்தோன்றும்.

நடுநிசி கடந்து நடை தொடர்ந்தது. நடக்க முடியாதவர்கள் வீதியோரம் கிடந்த கட்டைகள் மற்றும் பெரிய கற்களின் மீது அமர்ந்தார்கள். ஒரு நிமிடமோ அல்லது இரண்டு நிமிடமோ இளைப்பாறுவார்கள். இப்படியே கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம் வரை கடந்து விட்டார்கள். இப்போது வெடிச்சத்தங்கள் குறைவாகவே கேட்டது. தற்சமயம் இருக்கின்ற இடம் ஓரளவு பாதுகாப்பானது என்று சிலர் முடிவெடுத்து அங்குள்ள பொது இடங்களில் தங்குவதற்காக பயணத்தை நிறுத்தி வீதியோரம் காணப்பட்ட சனசமூக நிலையம் ஒன்றில் தஞ்சம் அடைந்தார்கள். மேலும் சிலர் இன்னும் பாதுகாப்பான இடம் வரவில்லை என்று கூறிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

செந்தூரனின் அப்பா அங்குள்ள சனசமுக நிலையத்தில் தங்குவதாக முடிவெடுத்து அங்கேயே ஒரு இடத்தை துப்புரவு செய்து அதிலே கையில் கொண்டு வந்த பொருட்களை வைத்தார். குடும்பத்தார் எல்லோரும் அவ்விடத்தில் போய் அமர்ந்தார்கள். நித்திரை கலக்கமும், பயணக்களைப்பும் செந்தூரனின் சகோதரிகளையும் தம்பியையும் விடவில்லை அமர்ந்த சில நொடிகளில் அம்மாவின் மடியில் தலை வைத்து உறங்கினார்கள். செந்தூரன் உறங்காமல் விழித்திருந்தான்.

அவனுக்கு தண்ணீர் தாகம் ஏற்படவே சனசமூக நிலைய வளவுக்குள் இருந்த புளிய மரத்தின் கீழ் உள்ள நீர்த்தாங்கியில் நீர் குடிக்க குழாயின் திருகுபிடியைப் பிடித்து திருப்பிக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஷெல்குண்டு சனசமூக நிலையத்தின் மேல் விழுந்து வெடித்தது. எதிர்பாராத அசம்பாவிதத்தைக் கண்ட அதிர்ச்சியில் செந்தூரன் மூர்ச்சையற்று கீழே விழுந்தான். அங்கே வெடித்து சிதறிய குண்டின் இரும்புப் பகுதி ஒன்று நேராக பறந்து வந்து அவனின் கழுத்தை முத்தமிட்டு வெளியேற, இவ்வளவு நேரமும் செந்தூரனுடன் கூடவே வந்த சந்திரனும் வெளியேறியது. சூரியனும் அங்கே உதயமானது.



## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில்

# “இரு பதங்கள் நீக்கம்”

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், பயங்கரவாதம் என்ற பதம் நீக்கப்பட்டுள்ளதுடன், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் அதன் மூலமான கைதுகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நேரடியாகக் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.



பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய புதிய திருத்தங்கள் என்னவென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, இவ்வாறு தெரிவித்த நீதி அமைச்சர் மேலும் கூறுகையில், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய பொலிஸாரிடம் வழங்கும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது. சாட்சியமளித்தல் வெளிப்படையாக்கப்பட்டுள்ளது.

தடுப்பு காவல் தடையுத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதிக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டைத் திருத்தி தடுப்பு காவல் பிறப்பிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. நீதவான் நீதிபதிக்கு அறிவித்ததன் பின்னரே பாதுகாப்பு செயலாளர் தடுப்பு காவல் உத்தரவை ஒரு மாத காலத்துக்கு வரையறுத்து பிறப்பிக்க முடியும். ஒரு மாதத்துக்கு மேல் நீடிக்க வேண்டுமானால் அதற்கு நீதவான் நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் அதன் மூலமான கைதுகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நேரடியாகக் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது 2022. மே மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரைபில் பயங்கரவாதத்துக்கு விரிவான வரைவிலக்கணம் வழங்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் பரிசீலனை செய்தோம்.பயங்கரவாதத்துக்குச் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஏதும் கிடையாது.நாட்டுக்கு நாடு பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம் வேறு படுகிறது.

பிரித்தானியாவில் ‘திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் அனைத்தும் பயங்கரவாதம்’ என்று பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வழங்கப்படுகிறது. நாங்கள் அந்தளவுக்குச் செல்லவில்லை. பிரித்தானியாவில் பயங்கரவாதத்துக்கு வழங்கப்படும் வரைவிலக்கணத்துக்கு அமைவாகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், பயங்கரவாதம் என்ற பதம் நீக்கப்பட்டுள்ளது என்றார்.



# “கள ஆய்வின்றி வரி அதிகரிப்பு”

வரி அதிகரிப்பால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் ஆய்வுகள் எதனையும் செய்யாமலே அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) பிரதமரிடம் கேளுங்கள் கேள்வி நேரத்தின் போது உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

வற் வரி அதிகரிக்கப்பட்டதால் கிராமிய, நகர பிரதேச மற்றும் தோட்டப்புற மக்களுக்கு எந்தளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஆய்வு செய்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் கூறிய விடயம் தொடர்பில் நான் அதிருப்தியடைகின்றேன்.

நிதி நிர்வாக விடயத்தில் வரியை அறவிட முதலோ அல்லது வரியை நீக்குவதற்கு முன்னரோ நிதி பாதிப்பு மதிப்பீடொன்றைச் செய்ய வேண்டும். அவ்வாறு மதிப்பீட்டைச் செய்யாமலே வரி அதிகரிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான பிரச்சினையாகும். எப்படி வரி அறவிட்ட பின்னர் ஆய்வை நடத்த முடியும்.

இதேவேளை, வரி அதிகரிப்பின் பின்னர் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார். சந்தைக்குச் சென்று பார்த்தால் சீனி, பருப்பு உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தெரியும். எவ்வாறாயினும் இந்த அரசாங்கம் எவ்வித கள ஆய்வை செய்யாமலே வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

# “கழுத்தை இறுக்கினால் வறுமையே அதிகரிக்கும்”

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) அதிகரிப்பால் சந்தையில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளனவா? இல்லையா? என்பது தொடர்பில் சபையில் அரச மற்றும் எதிர்க்கட்சியினருக்கிடையே சர்ச்சை ஏற்பட்டது.

வற் அதிகரிப்பைத் தொடர்ந்து சந்தையில் பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டிய நிலையில், எதிர்க்கட்சியினர் கூறுவதைப் போன்று அவ்வாறு சந்தையில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய கூறினார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) பிரதமரிடம் கேளுங்கள் கேள்வி நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் மரிக்கார் எம்.பி எழுப்பிய கேள்வியின் போதே சர்ச்சை ஏற்பட்டது.

மரிக்கார் கேள்வியெழுப்பித் தெரிவிக்கையில், வற் அதிகரிப்பு மற்றும் புதிதாக 97 பொருட்கள், சேவைகள் வரி அறவீட்டுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனால் நான்கு பேரைக் கொண்ட குடும்பமொன்றின் வாழ்க்கைச் செலவு எவ்வளவு ரூபாவினால் அதிகரித்துள்ளது? மக்களின் வருமானம் அதிகரிக்கப்படாத நிலையில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? இந்த வற் வரி அதிகரிப்பால் வறுமைக் கோட்டுக்குள் வரும் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதா? எனக் கேட்டார்.

இதன்போது பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய கூறுகையில், வற் அதிகரிக்கப்பட்டமையை தொடர்ந்து பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்று புள்ளிவிபரவியல் தொகை மதிப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் தகவல் வழங்கலாம்.

இதேவேளை வற் வரியால் சந்தையில் பொருட்களின் விலை தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படவில்லை. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அறிக்கையொன்றைக் கோரினேன். அவ்வறிக்கையின் பிரகாரம் பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படவில்லை.

இதனை தொடர்ந்து மீண்டும் கேள்வியெழுப்பி கருத்து தெரிவித்த மரிக்கார் எம்.பி தெரிவிக்கையில், நாட்டில் 500 அங்காடிகள் மூடப்படும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இங்கே விலை அதிகரிக்கப்படாத பொருட்கள் தொடர்பில் கூறப்பட்டாலும் விலை அதிகரிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் எதனையும் கூறவில்லை. வருமானத்தை மக்களின் கழுத்தை இறுக்கிப் பெற்றுக்கொள்ள முயன்றால் வறுமையே அதிகரிக்கும் என்றார்.



# “TIN இலக்கம் முரணானது”

வரி செலுத்துவோர் TIN இலக்கம் பதிவு தொடர்பில் நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி தேசிய வரி வருமானச் சட்டத்துக்கு முரணானது. ஆகவே இந்த வர்த்தமானியை எவரேனும் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினால் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வரி வருமான இலக்கங்களை இரத்து செய்ய நேரிடும், எதிர்கால வரி இலக்க பதிவுகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என சுயாதீன எதிரணி எம்.பி. யான காமினி வலபொட தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) கூற்றொன்றை முன்வைத்தே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் (TIN) பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி வெளியிடப்பட்டுள்ளார்.

தேசிய வரி வருமான சட்ட உறுப்புரிமைகளுக்கு அமைய வயது அடிப்படையில் வரி அறவிட முடியாது. வருமானத்தின் அடிப்படையில் தான் வரி அறவிடப்பட வேண்டும். வருடாந்தம் 12 இலட்சத்துக்கும் அதிகமான வருமானம் பெறுவோரிடமிருந்து வருமான வரியை அறவிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாக நிதியமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நடைமுறையில் வரி வலையமைப்பு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆகவே, தேசிய வரி வருமான சட்டத்தை திருத்தம் செய்து முறையான வழிமுறைகளுக்கு அமைய வரி செலுத்துவோர் தொடர்பில் பதிவுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.





# தத்தளிக்கிறது கிழக்கு பதுளையில் மண்சரிவு

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற வானிலையால், கிழக்கில் பல இடங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. பல இடங்கள் தத்தளிக்கின்றன. இதனால், அப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதேவேளை, மலையகத்தில் பதுளை மாவட்டத்தில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

(தமிழ் மிரர் நிருபர்கள்)

## பதுளையில்...



## அம்பாறையில்...










## மட்டக்களப்பில்...






## பண்டாரவளையில்...



## மகாவலியில்





## கிழக்கில்...







## பொலன்னறுவையில்...

## தம்பலகாமத்தில்...



ஒடிசா

பாம்பு கடி வழக்கு

# தெளிவாக எழுத உத்தரவு



தனது மகன் பாம்பு கடித்து இறந்துவிட்டதால் கருணைத் தொகை கேட்டு ஒடிசா மாநில உயர் நீதிமன்றில், ஒருவர் மனுதாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணையின்போது, அரசு சார்பில் இணைக்கப்பட்ட பிரேதப் பரிசோதனை அறிக்கை தெளிவாக, புரிந்துகொள்ளும்படியாக இல்லை.

வழக்கை விசாரித்த நீதிபதி மருத்துவரை ஆஜராக உத்தரவிட்டார். மருத்துவர் காணொளி காட்சியில் ஆஜராகி விளக்கமளித்தார்.

மேலும், ஒடிசா அரசுக்கு ஓர் உத்தரவையும் பிறப்பித்தார். அதில், "அனைத்து மருத்துவர்களும் மருந்து சீட்டுகள் மற்றும் மருத்துவ அறிக்கைகள், சட்ட அறிக்கைகளை தெளிவான கையெழுத்தில் வழங்க வேண்டும். முடிந்தால் பெரிய எழுத்துகளில் அல்லது தட்டச்சு செய்யப்பட்ட வடிவத்தில் வழங்குமாறு தலைமை செயலாளர் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்" என உத்தரவிட்டார்.



உத்தரப் பிரதேசம்

## 30 ஆண்டுகால மௌன விரதத்தை முடிக்கும் மூதாட்டி

ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 85 வயதான சரஸ்வதி தேவி என்பவர் கடந்த 30 ஆண்டுகளாக மௌன விரதத்தை மேற்கொண்டுள்ளார்.

4 குழந்தைகளுக்கு தாயான இவரது கணவன் இறந்த பின்னர் தனது வாழ்நாளை கடவுள் ராமருக்கே அர்ப்பணித்தார். இதையடுத்து, சரஸ்வதி தேவி நாடு முழுவதும் உள்ள பல்வேறு கோயில்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு வந்துள்ளார். 1992 டிசெம்பரில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, ராமரின் தீவிர பக்தரான அங்கு ராமர் கோயில் கட்டப்படும் வரை மௌன விரதம் இருக்கப்போவதாக சரஸ்வதி தேவி, உறுதிபூண்டார். 2020 வரை தினமும் 23 மணி நேரம் மௌன விரதமும், மதியம் 1 மணி நேரம் பேசிக்கொண்டும் இருந்திருக்கிறார். 2020இல் ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட பின் 24 மணிநேரமும் மௌன விரதம் இருந்துள்ளார். இந்நிலையில் ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் அவரது மௌன விரதத்தை முடிவுக்கு கொண்டு வருவார் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.



லட்சத்தீவு

## லட்சத்தீவில் விமான நிலையம்

லட்சத்தீவின் தென்கோடியில் உள்ள மினிகாய் தீவில் புதிய விமான நிலையத்தை உருவாக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் லட்சத்தீவுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, கவரட்டியில் சுமார் ரூ.1150 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இதுபோன்று நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்ததுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அதன்படி, தொழில்நுட்பம், எரிசக்தி, நீர்வளம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இதன்பின் பிரதமர் கூறியதாவது, லட்சத்தீவின் நிலப்பரப்பளவு சிறியதாக இருந்தாலும், மக்களின் இதயங்கள் கடலைப் போல ஆழமாக உள்ளன.

கரையோர தீவுப் பகுதிகள் நீண்டகாலமாக புறக்கணிக்கப்படுகிறது. எங்கள் அரசு அவற்றுக்கு முன்னுரிமை அளித்துள்ளது என்றார்.

பிரான்ஸ்

# பிரதமராகிறார் கேப்ரியல் அட்டல்



2022ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக இம்மானுவேல் மேக்ரான் 2ஆவது முறையாக பதவியேற்றார். ஆனால், பிரான்ஸ் அரசு கொண்டு வந்த ஓய்வூதிய கொள்கைகள், குடியேற்ற சட்டங்கள் ஆகியவற்றை எதிர்த்து இம்மானுவேல் மேக்ரானுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.

மேலும், இடைத் தேர்தல்களில் தோல்வியடைந்த மேக்ரான் அரசு, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தது. பிரான்ஸ் நாட்டின் அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வர ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் திட்டமிட்டுள்ளார். இதனிடையே அந்நாட்டின் பிரதமராக இருந்த 62 வயதான எலிசபெத் போர்ன், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இந் நிலையில், பிரான்ஸ் நாட்டின் அடுத்த பிரதமராக 34 வயதான அந்நாட்டின் கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டல் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கேப்ரியல் அட்டல், தன்னை ஓர் ஓரினச்சேர்க்கையாளர் என வெளிப்படையாக அறிவித்தவர் ஆவர். அவர் பிரதமராக நியமிக்கப்பட்டால், பிரான்ஸ் வரலாற்றில் மிகக் குறைந்த வயதில் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் என்ற சிறப்பையும், அதோடு பிரதமராக பதவியேற்கும் முதல் தன்பாலின ஈர்ப்பாளர் என்ற சிறப்பையும் பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாலத்தீவு

## "அதிக சுற்றுலா பயணிகளை அனுப்புங்கள்"

மாலத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு ஐந்து நாட்கள் பயணமாக சீனாவுக்கு சென்றிருக்கிறார். இந்த பயணத்தின் போது, மாலத்தீவு மற்றும் சீனா இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுப்பயணத்தின் இரண்டாவது நாளில் ஜனாதிபதி முய்சு சீனாவின் ஃபுஜியான் மாகாணத்தில் உள்ள மாலத்தீவு வர்த்தக மன்றத்தில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், "மாலத்தீவுக்கு அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகளை அனுப்ப சீனா முயற்சி எடுக்க வேண்டும். மாலத்தீவின் வளர்ச்சியில் மிக நெருங்கிய நட்பு நாடாக சீனா விளங்குகிறது.

"மாலத்தீவு வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்பு திட்டங்களை சீனா தொடங்கியிருக்கிறது. கொரோனா பெருந்தொற்றுக்கு முன் எங்களின் முதன்மை வணிக மையமாக சீனா இருந்தது. இதே நிலை மீண்டும் உருவாக வேண்டும் என விரும்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.





இலங்கை எதிர் சிம்பாப்வே:

# இன்று மூன்றாவது போட்டி

இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் மழையால் முடிவேதும் இல்லாததோடு, இரண்டாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் தோல்வியை இலங்கை தவிர்க்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் குசல் மென்டிஸிலிருந்து இளம் வீரர் அவிஷ்க பெர்ணாண்டோ, முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக வரையில் துடுப்பாட்டத்தில் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது. இப்போட்டியில் ஷானக அல்லது அவிஷ்க பெர்ணாண்டோவுக்குப் பதில் நுவனிடு பெர்ணாண்டோ களமிறங்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதோடு, அகில தனஞ்சய, பிரமோத் மதுஷன், டுனித் வெல்லலாகே ஆகியோர் ஜெஃப்ரி வன்டர்சே, துஷ்மந்த சமீர, மகேஷ் தீக்ஷனவைப் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக சிம்பாப்வே சார்பாக சிகண்டர் ராசா, றயான் பேர்ள், மில்டன் ஷூம்பாவிடமிருந்து பெரிய இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.



இந்தியா எதிர் ஆப்கானிஸ்தான்:

# இன்று ஆரம்பிக்கிறது

### தனதிடத்தை நியாயப்படுத்துவாரா கோலி?

இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது, மொஹாலியில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

கடந்த இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் முதற்தடவையாக அணித்தலைவர் றோஹித் ஷர்மாவும், விராட் கோலியும் அணியில் இடம்பெற்றுள்ள நிலையில், ரிங்கு சிங் உள்ளிட்ட வீரர்களின் எழுச்சிகளுக்கு மத்தியில் வேகமாகத் துடுப்பெடுத்தாடி தன்னை நிரூபிக்க வேண்டிய தேவையில் கோலி காணப்படுகின்றார்.

ஏனெனில், குழாமுக்கு வெளியேயும் இஷன் கிஷன், லோகேஷ் ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர் உள்ளிட்டோர் காணப்படுகின்ற நிலையில் இவ்வாண்டு இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பதாக இத்தொடரே இந்தியாவுக்கு இறுதியானதாகக் காணப்படுகின்றது.

மறுபக்கமாக காயம் காரணமாக ரஷீட் கான் இல்லாதபோதும் மொஹமட் நபி, முஜீப் உர் ரஹ்மான், பஸல்ஹக் பரூக்கி, நவீன்-உல்-ஹக், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், நஜிபுல்லாஹ் ஸட்ரான், ஹஸரத்துல்லா ஸஸாய் என பலமானதாகவே ஆப்கானிஸ்தான் காட்சியளிக்கின்றது.

அவுஸ்திரேலியக் குழாமில்

# ஸ்டொய்னிஸ் இல்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில் மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் இடம்பெறவில்லை.

இதேவேளை, முதற்தடவையாக ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் லான்ஸ் மொரிஸ் இடம்பெற்றுள்ளார்.

அணித்தலைவர் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் மார்ஷுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் அணிக்கு ஸ்டீவன் ஸ்மித் தலைமை தாங்கவுள்ளார்.

இதேவேளை குழாமில் வேகப்பந்து வீச்சாளர் ஜை றிச்சர்ட்ஸன் மீள அழைக்கப்பட்டுள்ளதோடு, சகலதுறைவீரர்கள் ஆரோன் ஹார்டி, மற் ஷோர்ட், வேகப்பந்துவீச்சாளர் நாதன் எலிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: ஸ்டீவ் ஸ்மித் (அணித்தலைவர்), ஷோன் அபொட், நாதன் எலிஸ், கமரோன் கிறீன், ஆரோன் ஹார்டி, ட்ரெவிஸ் ஹெட் (உப அணித்தலைவர்), ஜொஷ் இங்லிஸ் (விக்கெட் காப்பாளர்), மர்னுஸ் லபுஷைன், கிளென் மக்ஸ்வெல், லான்ஸ் மொரிஸ், ஜை றிச்சர்ட்ஸன், மற் ஷோர்ட், அடம் ஸாம்பா.

சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில்

## மத்தியூஸ், குசல் பெரேரா சிம்பாப்வேக்கெதிரான

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் அஞ்சலோ மத்தியூஸ், குசல் பெரேரா, தனஞ்சய டி சில்வா, அகில தனஞ்சய, நுவான் துஷார, கமிந்து மென்டிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இடம்பெற்றிருந்த அவிஷ்க பெர்ணாண்டோ, நுவனிடு பெர்ணாண்டோ, ஜனித் லியனகே, டுனித் வெல்லலாகே, பிரமோத் மதுஷன், ஜெஃப்ரி வன்டர்சே ஆகியோர் இக்குழாம் இடம்பெறவில்லை.



குழாம்: வனிடு ஹசரங்க (அணித்தலைவர்), சரித் அசலங்க (உப அணித்தலைவர்), குசல் மென்டிஸ், சதீர சமரவிக்கிரம, குசல் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், தசுன் ஷானக, தனஞ்சய டி சில்வா, கமிந்து மென்டிஸ், பதும் நிஸங்க, மகேஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண, நுவான் துஷார, அகில தனஞ்சய.

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடர்:

## மிடில்ஸ்பேர்க்கிடம் தோற்ற செல்சி இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக்



கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியில், மிடில்ஸ்பேர்க்கின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

மிடில்ஸ்பேர்க் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹெய்டர் ஹக்னே பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 11 ஜனவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.